BRAMPTON **Service and Information Update**

**மாகாண நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகும் வகையில் கோவிட்-19 க்கு எதிரான நடவடிக்கைகளை எச்சரிக்கையுடனும் படிப்படியாகவும் தளர்த்துவதற்காக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் புதிய நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளை வழங்க தயாராகிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 25, 2022) – கடந்த வாரத்தில் ஒன்ட்டாரியோ அரசாங்கத்தின் அறிவிப்பினைத் தொடர்ந்து, ஜனவரி 31 தொடங்கி நிகழ்ச்சிகளையும் சேவைகளையும் வழங்க, சில கட்டிடங்களை மீண்டும் திறக்க, ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராகிறது.

**ஜனவரி 31 முதல் அமலாகவிருக்கும் மாகாணத்தின் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

ஜனவரி 31, 2022, திங்கட்கிழமை 12:01 மணி அளவில் இருந்து பின் வரும் நடவடிக்கைகள் இருந்துவரும்:

- சமூக கூட்டங்கள் கூடுவதில் 10 நபர்கள் எனும் வரம்பில் இருந்து 25 நபர்கள் என அதிகரித்தல்.
- கட்டிடங்களுக்கு உள்ளாக அவற்றின் கொள்திறனில் 50 சதவீத எண்ணிக்கையிலான நபர்கள் எனும் வரம்பினைப் பேணுதல் அல்லது அதிகரித்தல், இதில் கீழுள்ளவை தவிர்த்து வேறு பிறவும் இருக்கும்:
    - சிற்றுண்டியகங்கள், மதுபார்கள் மற்றும் நடனம் ஆடும் வசதிகள் இல்லாத பிற உணவு மற்றும் பானம் வழங்கும் நிறுவனங்கள்;
    - சில்லறை விற்பனைக் கடைகள் (மளிகைக் கடைகள் மற்றும் மருந்து விற்பனைக்கடைகள் உள்பட);
    - ஷாப்பிங் மால்கள்;
    - உடற்பயிற்சிசாலைகள் உள்ளிட்ட, பார்வையாளர் கூடுமிடமல்லாத பகுதிகள் மற்றும் பொழுதுபோக்குரீதியிலான உடற்பொருத்தம் செய்துகொள்ளும் வசதிகள்;
    - திரையரங்குகள்;
    - கூட்டம்  மற்றும் நிகழ்ச்சி நடத்தும் இடங்கள்;
    - நீர் விளையாட்டுப் பூங்காக்கள் உள்ளிட்ட பொழுதுபோக்கும் வசதிகள் மற்றும் மகிழ்ச்சியூட்டும் பூங்காக்கள்;
    - அருங்காட்சியகங்கள், ஓவியக் கூடங்கள், மீன்காட்சி சாலைகள், மிருக காட்சி சாலைகள் மற்றும் இவை போன்ற ஈர்க்கும் இடங்கள்;
    - கேஸினோக்கள், பிங்கோ அரங்குகள் மற்றும் பிற விளையாட்டு நிறுவன அமைப்புக்கள்; மற்றும்
    - மதரீதியான சேவைகள், சடங்குகள் அல்லது சம்பிரதாயங்கள்.
- விளையாட்டு நிகழ்ச்சிகள், இசைக்கச்சேரி அரங்குகள் மற்றும் நாடக கொட்டகைகள் போன்ற இடங்களில்,  அவற்றின் கொள்திறனில் 50 சதவீதம் நபர்கள் அல்லது 500 நபர்கள் இதில் எது குறைவோ அவ்வளவுக்கான கொள்திறனில் பார்வையாளர்களை அனுமதித்தல்.

ஏற்கெனவே இருக்கும் கட்டிட அமைப்புக்களில் தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான மேம்படுத்தப்பட்ட சான்று மற்றும் இதர தேவைப்பாடுகள் தொடர்ந்து இருக்கும்.

**நகர சேவைகள், நிகழ்ச்சிகள் மற்றும் கட்டிட வசதிகள்**

<u>நகர் மன்றம் மற்றும் பெருநிறுவனங்களுக்கான கட்டிடங்கள்</u>

பிப்ரவரி 21 ஆம் தேதிக்கு நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்களில், போகிற போக்கில் மக்கள் நேரில் வந்து சேவைகளைப் பெறுவது அனுமதிக்கப்படும்  அது வரை முன்பதிவின் பேரில் மட்டுமே சேவைகள் இருக்கும். முன்பதிவு செய்து கொள்ள வருகை தரவும்: www.brampton.ca/skiptheline.

கூட்டம் கூடும் கட்டிட வசதிகள் மற்றும் அவற்றுக்கான வாடகை பற்றிய மேலும் தகவல்கள் வரவிருக்கும் வாரங்களில் வழங்கப்படும்.

<u>ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து</u>

அடுத்த அறிவிப்பு வரும் வரை, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து குறைக்கப்பட்ட சேவைகள் தரப்பட்டு இயக்கப்படுகிறது. கூடவே, தேர்ந்தெடுக்கப்பட்ட பேருந்து முனைய பணி நேரங்கள் சீர் செய்யப்படுகின்றன.

பேருந்து தடங்களுக்கான மிகசமீபத்திய அட்டவணை மற்றும்  செயல்பாட்டு நேரங்கள் பற்றிய தகவலுக்கு, வாடிக்கையாளர்கள் 905.874.2999 என்ற எண்ணில் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் தொடர்பு மையத்தை அழைக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். வழக்கமான சேவை புதுப்பிப்புகளுக்கு, www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்தொடரவும்.

ப்ராம்ப்ட்டன் பேருந்துகளில்  பயணம் செய்யும் போது, பேருந்தைப் பயன்படுத்தும் நபர்கள், பேருந்து மற்றும் முனையங்களில் இறுக்கமான முக கவசத்தை அணிய நினைவூட்டப்படுகிறார்கள்; மருத்துவ அவசரம் இருந்தால் தவிர, பயணம் செய்யும் போது சாப்பிட அல்லது குடிப்பதற்கு முகக் கவசங்ககளைத் தாழ்த்துவதைக் தவிர்க்கவும்.  பயணம் செய்யும் போது, கை சுத்திகரிப்பி அல்லது துடைப்பான்கள் போன்ற தங்கள் சொந்த கிருமிநாசினிகளை எடுத்துச் செல்லவும், கைகளை அடிக்கடி கழுவவும், இருமல் அல்லது தும்மலின்போது அவரவர் முழங்கைகளில் மறைத்தபடி செய்யும்படியும் பயணிகள் நினைவூட்டப்படுகிறார்கள்.

துப்புரவு மற்றும் சுத்திகரிப்புக்கான மேம்படுத்தப்பட்ட கால அட்டவணை நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு 48 மணி நேரத்திற்கும் அனைத்து கடினமான மேற்பரப்புகள், இயக்குபவர் கூண்டுகள் மற்றும் இருக்கைகளை கிருமி நீக்கம் செய்வது ப்ராம்ப்ட்டன் பேருந்து நிறுவனத்தின் இலக்காகும். பெரும்பாலான பேருந்துகள் தற்போது ஒவ்வொரு 24 மணி நேரமும் சுத்தம் செய்யப்படுகின்றன. கட்டிடங்கள் மற்றும் டெர்மினல்களில் உள்ள கடினமான மேற்பரப்புகள் தினசரி அடிப்படையில் துடைக்கப்பட்டு சுத்தப்படுத்தப்படுகின்றன.

<u>பொழுதுபோக்கு</u>

**<u>கட்டிடங்களுக்கு உள்ளே பொழுதுபோக்கு வசதிகள்</u>**

பொழுதுபோக்கு மையங்கள் ஜனவரி 31 ஆம் தேதி திங்கட்கிழமையன்று, திட்டமிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் போகிற போக்கில் செல்லக்கூடிய நிகழ்ச்சிகளுக்காக மீண்டும் திறக்கப்படும். மாகாண ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப, பொழுதுபோக்கு மையங்களின் கொள்திறன் வரம்புகளின் எண்ணிக்கை 50 சதவீதமாக குறைக்கப்படும். இந்த பொழுதுபோக்கு மையங்களுக்குச் செல்ல முன்கூட்டி பதிவு செய்தல் தேவையில்லை என்றாலும், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அனுமதி என்பதால் முன்கூட்டியெ ஆன்லைனில் தங்கள் வருகையைப் பதிவு செய்து கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது. ஜனவரி 27 காலை 10 மணி முதல் www.brampton.ca/registerforprograms க்கு வருகை புரிந்து கிடைக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் என்னவென பார்வையிட்டுக்கொள்ளலாம்.

*குளிர்காலத்திற்கு பதிவு செய்யப்பட்ட பருவகால நிகழ்ச்சிகள்*

குளிர்காலத்திற்கு பதிவு செய்யப்பட்ட பருவகால நிகழ்ச்சிகளுக்கான அமர்வு குறுகிய கால அமர்வாக ஜனவரி 31 ஆம் தேதி துவங்கும் வாரத்தில் மீண்டும் துவங்கும். நிகழ்ச்சி முடியும் தேதிகள் சீர் செய்யப்படும். குளிர்கால நிகழ்ச்சிகளுக்கு பதிவு செய்து கொண்ட பங்கேற்பாளர்கள் தங்கள் வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கப்பட்ட விகிதாச்சாரப்படி அமர்வின் குறைக்கப்பட்ட கால அளவிற்கு பற்று வைக்கப்படுவார்கள்.

*உறுப்பினராதல்*

உறுப்பினர் சேர்க்கை ஜனவரி 26 புதன்கிழமை காலை 10 மணிக்கு துவங்கும். கிடைக்கவிருக்கும் உறுப்பினராதல் விருப்பத்தெரிவுகளைப் பற்றி இங்கு காணலாம்: www.brampton.ca/memberships.

*தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான சான்று காட்டவேண்டிய தேவை*

ப்ராம்ப்ட்டன் நகருக்குள் நுழையும் 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது கொண்ட அனைத்து பார்வையாளர்களும் தடுப்பூசி தெலுத்திக்கொண்ட நிலைக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும். இளைஞர்கள், பயிற்சியாளர்கள், பயிற்றுனர்கள், பராமரிப்பாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் உட்பட பொழுதுபோக்கு மையங்களில் பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகிய அனைவருக்கும் இது பொருந்தும்.

2022 இல் 12 வயதை அடையும் குழந்தைகளுக்கு (2010 இல் பிறந்தவர்கள்) அவர்கள் பிறந்த நாளிலிருந்து 12 வாரங்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டும்; இந்த வேளையில் உட்புற விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளில் தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டிய அவசியமில்லை. இது குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தத் தேவையான நேரம் கொடுக்கும் மற்றும் தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான சான்று காட்டுவதைப் பூர்த்தி செய்யும். 12 வார கால அவகாசம் முடிந்த பிறகு, தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

*தடுப்பூசி செலுத்திக்கொண்டமைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுகள்*

பொழுதுபோக்கு மையங்களுக்கு வருபவர்கள் QR குறியீடு மற்றும் Verify Ontario ஆப் உபயோகித்த மேம்படுத்தப்பட்ட தடுப்பூசி சான்றிதழை பயன்படுத்த வேண்டும். QR குறியீட்டை டிஜிட்டல் முறையில் பயன்படுத்தலாம் அல்லது காகிதத்தில் அச்சிட்ட நகலை காண்பிக்கலாம். தனிநபர்கள் இங்கு வருகை புரிந்து தங்கள் மேம்படுத்தப்பட்ட சான்றிதழை QR குறியீட்டுடன் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். எதிர்மறையான COVID-19 சோதனைக்கான ஆதாரம் தடுப்பூசி முழுமையாக செலுத்திக்கொள்ளப்பட்டது எனும் ஆதாரத்திற்கு மாற்றாக ஏற்றுக்கொள்ளப்படாது. பொழுதுபோக்கு மையங்களை அணுக எழுத்துப்பூர்வ மருத்துவ விலக்குகள் இனி ஏற்கப்படாது.

*ஆன்லைன் தகுதி கண்டறிதல்*

ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு மையங்களுக்கு வருவதற்கு முன் அனைத்து பார்வையாளர்களும் ஆன்லைன் ஸ்கிரீனிங் மற்றும் தொடர்பு கொண்டமைக்கான தடமறிதல் படிவத்தை பூர்த்தி செய்வதற்கான விருப்பத் தேர்வினைப் பெறுவார்கள். ஆன்லைன் ஸ்கிரீனிங் கருவியை அணுக, இங்கு செல்க.

பார்வையாளர்கள் தங்கள் வருகைக்கு முன்னதாகவே ஸ்மார்ட்ஃபோன்/கணினியைப் பயன்படுத்தி ஆன்லைனில் ப்ரீ-ஸ்கிரீனிங் கேள்விகளுக்கு பதிலளித்து தங்கள் நேரத்தை மிச்சப்படுத்தலாம். நியமிக்கப்பட்ட ஸ்கிரீனிங் பகுதி/நுழைவாயிலுக்கு வந்தவுடன், அனைத்து பார்வையாளர்களும் அவரவர் தொலைபேசியில் காட்சிப்படுத்துவதன் மூலம் தகுதி பெற்றதை (பச்சை சரிபார்ப்பு குறி) காண்பிக்க வேண்டும். ஆன்லைன் ப்ரீ-ஸ்கிரீனிங்கை முடிக்க விரும்பாத பார்வையாளர்களுக்கு அந்தந்த இடத்தில் காகித அடிப்படையிலான தொடர்புத் தடமறிதல் தொடர்ந்து கிடைக்கும்.

***திறந்தவெளி புத்துணர்வாக்கல் வசதிகள்***

திறந்தவெளி ஸ்கேட்டிங் மற்றும் மவுண்ட் சிங்க்வாகவ்சி உள்ளிட்ட வெளிப்புற நிகழ்ச்சிகள் மற்றும் வசதிகள் தொடர்ந்து கிடைக்கின்றன. திறந்தவெளி நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் தொடர்பான சமீபத்திய தகவல்கள்www.brampton.ca/winterwonderland எனும் வலைப்பக்கத்தில் கிடைக்கின்றன. பனிச்சறுக்கு வளையங்கள், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில், வானிலை மற்றும் பனிச்சூழல் அனுமதிக்கும் பட்சத்தில் தொடர்ந்து செயல்படும். பார்வையாளர்கள் தங்கள் வருகைக்கு முன்பாகவே திறந்தவெளி பனிச்சறுக்கு வழிகாட்டுதல்கள் மற்றும் திறந்தவெளி வளையங்கள் செயல்படும் நிலையை தெரிந்துகொள்ள www.brampton.ca/outdoorskating எனும் வலைப்பக்கத்தைப் பார்வையிட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

<u>ரோஸ் கட்டிடம் மற்றும் நிகழ்த்து கலை அரங்குகள்</u>

ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து நிகழ்த்து கலை நிகழ்ச்சிகளுக்கான கட்டிடங்கள் நேயர்கள் ஒத்திகை செய்யவும் பதிவு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்காகவும் கிடைக்கும். நேயர்கள் நேரில் இருந்து கண்டுகளிக்கும் நிகழ்ச்சிகள் மார்ச் 2022 இல் துவங்கும்; இது கோவிட்-19 க்கான கட்டுப்பாடுகளுடன் இருக்கும்.

பிப்ரவரி 21, 2022 அன்று கார்டன் ஸ்க்வேர்-இல் திறந்தவெளி நிகழ்ச்சி நடத்துதல் இடம்பெறும்..

வரவு/காசோலை க்கான பணம் திருப்பிக் கொடுத்தல், கணக்கில் வரவு வைத்தல் ஆகியவை அனைத்து டிக்கட் வைத்திருப்பவர்களுக்கும் கிடைக்கும்; இதற்கான வழி இந்த மின்னஞ்சலுக்கு எழுதுவதேயாகும்: boxoffice@brampton.ca.

கூடுதல் விபரங்கள் கிடைக்குமிடம்: www.therosebrampton.ca.

LBP மற்றும் சிரில் பார்க் நாடக கொட்டகைகள் மார்ச் 2022 இல் கோவிட்-19 க்கான கட்டுப்பாடுகளுடன் மீண்டும் திறக்கும்.

ப்ராம்ப்ட்டன் நூலகம்

ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து நூலக கிளைகளும் கிளை சேவைகளுக்காக தினமும் திறந்திருக்கும்; மவுண்ட் ப்ளஸெண்ட் வில்லேஜ் -இல் மட்டும் எட்ட இருந்து எடுத்துக்கொள்ளும் சேவையை வழங்கும்,. விரைவில், புரொஃபஸர்ஸ் லேக், லோஃபர்ஸ் லேக் மற்றும் சிங்க்வாகவ்சி பூங்காக்களில் குடியிருப்பாளர்கள் திறந்தவெளியில் இருந்தபடி கதைகளை படித்து அனுபவிக்க முடியும்; இது விரைவில் வரவிருக்கிறது. சிங்க்வாகவ்சி கிளை நூலகம், முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் இலவச குளிர்காலச் செயல்பாட்டுக் கருவி தொகுப்புகளைக் கொடுக்கிறது. விவரங்களுக்கு www.bramptonlibrary.ca வலைத்தளத்தைப் பார்க்கவும்.

**கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல்**

உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கான மிகச்சிறந்த வழி தடுப்பூசி செலுத்திகொள்ளுதலே ஆகும். ஐந்து மற்றும் அதற்கும் அதிகமான வயது கொண்டோருக்கான முன்பதிவுகளை இப்போது ஒன்ட்டாரியோவின் தடுப்பூசி செலுத்துதலுக்கான முன்பதிவு கட்டமைப்பு மூலமாக அல்லது 1.833.943.3900 என்ற எண்ணிற்கு அழைப்பதன் மூலமாக முன்பதிவு செய்துகொள்ளலாம்.

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயது கொண்ட தனி நபர்கள் இப்போது தங்களுக்கான கோவிட்-19 பூஸ்ட்டர் செலுத்திக்கொள்வதற்கான முன்பதிவினை செய்து கொள்ளலாம்; இதற்கு, அவரவரின் கடைசி டோஸ் செலுத்திக்கொண்ட தேதியிலிருந்து குறைந்தது மூன்று மாதங்கள் முடிந்திருக்க வேண்டும்.
முன்பதிவு செய்துகொள்ள வருகை தரவும்: https://covid-19.ontario.ca/covid-19-vaccines-ontario
கோவிட்-19 தடுப்பூசி செலுத்துதல் பற்றிய மிக சமீபத்திய தகவல்களுக்கு மாகாணத்தின் தடுப்பூசி செலுத்தும் முனையத்திற்கு வருகை தரவும்.

**முகக் கவசங்கள்**

ப்ராம்ப்ட்டன் கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தினை, ஏப்ரல்1, 2022 வரை நகர நிர்வாகம் நீட்டித்திருக்கிறது என குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது.

கோவிட்-19 கட்டாய முக கவசம் அணிதல் சட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டனில் உள்ள அனைத்து பொது கட்டிடங்களின் உட்புறத்தில் மருத்துவம் அல்லாத முக கவசம் அணிவது கட்டாயமாகும். கழுத்தில்,

தலையில்  அணியும் எந்தவித துணிகள் அல்லது கதகதப்பாக்கும் கம்பளிகள் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்ட முக கவசங்கள் ஆகமாட்டா. மேலும் இந்தச் சட்டத்தின்படி, உணவு சாப்பிடும்போது அல்லது பானம் அருந்தும்போது, அதற்கான உரிய இடத்தில் அமர்ந்தபடி இருக்கும்போது மட்டுமே முக கவசம் கழற்றப்பட வேண்டும்.

நகரவாசிகள், உடல்ரீதியாக இடைவெளி விட்டபடி, நல்ல சுகாதார பழக்கங்களைக் கடைப்பிடித்தபடி மற்றும் முக கவசங்களை அணிந்தபடி, தொற்று பரவாமல் தடுக்க,  தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செய்து வருவதற்காக, நகர நிர்வாகம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்டன் நகரம் 905-874-3426 |
Monika.Duggal@brampton.ca